செய்தி வெளியீடு எண் : 125 நாள் : 16.01.2025

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உலகப் புகழ்பெற்ற மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (16.1.2025) உலகப் புகழ்பெற்ற மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆண்டுதோறும் மதுரை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 14.1.2023–அன்று அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி, 15.1.2025–அன்று பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி, 16.1.2025–அன்று அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி என முறையே நடத்திட திட்டமிட்டு, முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஜல்லிக்கட்டு போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை காண அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், மலேசியா, இத்தாலி, இஸ்ரேல், தைவான், உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளைச் சேர்ந்த 90 சுற்றுலா பயணிகள் மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் வருகை தந்து பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜல்லிக்கட்டு போட்டியின் பல்வேறு சுற்றுகளில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கும், காளைகளுக்கும் தங்க மோதிரம், தங்க நாணயங்கள் உள்ளிட்ட பல்வேறு பரிசுகளை வழங்கினார்.

முன்னதாக அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்ற மாடுபிடி வீரர்கள் 'பாதுகாப்பான ஜல்லிக்கட்டு' உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல்

சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.தங்கதமிழ்ச்செல்வன், டாக்டர்.ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கோ.தளபதி, திரு.ஆ.வெங்கடேசன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, இ.ஆ.ப., ஆகியோர் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu